திருநெல்வேலி சைவசித்தாந்த சங்க வெளியீடு-௫

உ

திருச்சிற்றம்பலம்

# சைவசமய வளர்ச்சிக்காக
# நாம் செய்யவேண்டிய வேலை யாது?

இஃது
இரத்தாட்சி ஆண்டு ஆனித் திங்கள் எட்டாம் நாளன்று
திருக்குற்றாலத் திருத்தலத்தில் குழுமிய இச்சங்கத்
தின் நிறைவேற்றற் கூட்டத்தில்

காரைக்குடி
**திருவாளர் அரு. சோமசுந்தரச் செட்டியாரவர்கள்**
நிகழ்த்திய சொற்பொழிவின் சாரமாகும்.

திருநெல்வேலி
சைவ சித்தாந்த சங்கம்
ஆங்கீரச ௵ வைகாசி ௴

[2nd Edition]

*Published by*
THE SOUTH INDIA SAIVA SIDDHĀNTA SAṄGAM,
:: TINNEVELLY. ::

*June* 1932

Printed at The Imperial Printing Works, Madras.

திருச்சிற்றம்பலம்

# சைவ சமய வளர்ச்சிக்காக நாம் செய்யவேண்டிய வேலை யாது?

சைவப் பெருமக்களாகிய நாம் நமது சமய வளர்ச்சி கருதி இந்நாளில் செய்யவேண்டிய வேலைகள் பலவுள. அவ் வேலைகளை நிறைவேற்றுதற்கு முன் வந்து பணி செய்து பயன்விளைத்தற்குரிய தொண்டர்கள் பலரிலர். இதுகாலை அத்தி பூத்தது போல், ஆங்காங்கு ஒரு சில மெய்யன்பர்கள் சமயப் பிரசாரஞ் செய்து வருகின்றார்கள். பெரும்பாலோர் இன்னுந் தங்கள் கருத்தைப் பணி செய்தலிற் பதிக்கவில்லை. சைவ மகா சபைகள் பலவற்றில் சைவப் பெருமை பெரிதும் பேசப்படுகின்றதே யொழியச் சைவப் பணி நன்கு வலியுறுத்திப் பேசப்படவில்லை. சொற்பொழிவாளர்களும் கேட் டின்புறுவோரும், சொல்நயம் பொருள்நயம் முதலிய நலன்களையே நாடுகின்றார்களே யன்றி, வேலை நலத்தை நாடுகின்றார்களில்லை! இவ்வாறு சமயச் சபைகள் பல ஆண்டுக் கொருமுறை இன்பவிழா வெடுத்து மகிழ்வதோடு அமைந்து விடுகின்றன. பின்னர் அயர்ந்து உறங்க ஆரம்பித்து, அடுத்த ஆண்டின் தொடக்கத்திற்றான் ஆண்டு நிறைவுவிழாக் கொண்டாடுதற்காகக் கண்

விழிக்கின்றன. ஆனால் பயனற்ற அறிக்கை யேடுகளை மட்டும் அழகாகத் தயாரித்து அச்சிட்டுப் பரப்பிவிடு கின்றன. இஃது ஓர் பெருங் குறையாகும். முதற் கண் நாம் இக் குறையினை யொழித்தற்கே முயலுதல் வேண்டும். சமயச்சபைக ளனைத்தினையும் சமயத் தொண்டு செய்வதில் ஈடுபடுமாறு செய்தல் வேண்டும். ஒவ்வொரு சபையையும் சார்ந்துள்ள அங்கத்தின ரனைவரும் சமயத்தொண்டராக விருத்தல் வேண்டும். சந்தாப்பணம் ஒன்றை மட்டும் கருதிச் சங்கத்தில் அங்கத்தினர் எண்ணைப் பெருக்குத லாகாது. சமயத் தொண்டு செய்ய முன்வருவோரே அங்கத்தினராக விருத்தல் வேண்டும். மற்றவ ரனைவரையும் நன்கு அபிமானிகளாகச் சேர்த்துச் செல்வநிலையைப் பெருக் கிக்கொள்ளலாம். இவ்வழிபற்றிப் பணிசெய முன் வரும் திருக்கூட்டங்களும் திருத்தொண்டர்களுமே யாண்டும் பெருகுதல் வேண்டும். ஒரு திருக்கூட்டத் திற்கு ஐந்து திருத்தொண்டர்கள் இருந்தாலும் போதும். இத் திருக்கூட்டங்களுக்கு மிக அதிக மான செல்வ நிலையுந் தேட வேண்டுவதில்லை. திருத்தொண்டர்கள் மட்டும் தன்னலங் கருதாது, பொதுநலம் நாடுபவராக, இலவசப்பணி செய்வாராக விருத்தல் வேண்டும். அன்னார் நாடோறும் இவ் வேலையையே செய்தல் வேண்டுமென்பதில்லை. ஒரு மாதத்தில் பத்து நாட்கள் இப் பிரசார வேலையிற் செலவழித்தாற் போதும். முக்கியமாகத் தொண்ட ராவா ரனைவரும் இறை சிவன் திருவருளை முன்

னிட்டு, ஒற்றுமையோடும் நிறைந்த ஊக்கத்தோடும் பணிசெய்து அன்புநெறியினை வளர்க்கத்தக்க பேருணர்வுடையோரா யிருத்தல் வேண்டும். அன்னோர் உடம்பிலுள்ள இரத்த நாளங்க ளனைத்திலும் சைவ சித்தாந்தத்தேன் கலந்த இரத்தவெள்ளம் கொதிப்புற்றோடுதல் வேண்டும். எல்லோரும் பெரும் பண்டிதர்களாக விருக்கவேண்டும் என்ப தில்லை. பிரசார வேலை செய்தற்குப் போதிய வளவு பிழையறச் சைவ சித்தாந்த நுண் பொருள்களை அறிந்து கொண்டவர்களாக விருந்தாற் போதும். நான் எனும் அகந்தையின்மையும் அடக்கமும் அவசியம் அன்னோர்க்கு அணிகலன்களா யிருத்தல் வேண்டும். உண்மை, உறுதி, அஞ்சாமை, பொறுமை, நல்லொழுக்கம் முதலிய நற்குணங்களுக்கு அன்னோர் எடுத்துக் காட்டா யிலங்குதல் வேண்டும். அன்னோர் சிரங்களில் நால்வர் பொற்றாளும், கரங்களில் சைவசாத்திரங்களும் தோத்திரங்களும் திகழ்தல் வேண்டும். சிறப்பாக மெய்கண்ட சாத்திரம் பதினான்கும் திருமுறை பன்னிரண்டும் அவர்க ளுள்ளத்தில் ஊறித் ததும்பிப் பொங்குதல் வேண்டும். பணி செயுங் காலத்து, "பயன் பயன்" என்று பதறாது பணியைச் செவ்வனே செய்துகொண் டிருத்தல் வேண்டும். பணியைச் செவ்வனே செய்துகொண்டு சென்றால் பயன் விளைந்தே தீரும். இவ்வாறு, "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனும் இன்பவாக்கை முன்னிலைப் படுத்திக்கொண்டு, தொண்டராவா

ரனைவரும் நாட்டினைக் கலக்குதல் வேண்டும். இளை ஞர்தான் பெரிதும், "நான் வருகின்றேன், நான் வருகின்றேன்" எனத் திருக்கூட்டங்களிற் சேர்ந்து திருத்தொண்டு புரிய முன்வரல் வேண்டும். ஒவ்வொ ரினைஞனும், அழியும் இவ்வுடலை அழியாப் புகழை நிறுவுவதிற் பயன் படுத்துவேன் என்று இறு மாந்து இந் நெறியில் ஈடுபடுதல் வேண்டும். திருத் தொண்டர்கள் தெய்வ நீற்றினை நிறையப் பூசிக் கொண்டு, கண்டிகை பூண்டு கம்பீரமாக உரத்த குர லோடு மக்கள் மனத்தைக் கவரும்படி தெய்வத் தமி ழைப் பற்றியும் சைவப் பொருள்களைப் பற்றியும் சொற் பொழிவுகள் செய்தல் வேண்டும். ஜனங்கள் திரளா கக் கூடுமிடங்களிலெல்லாம் சைவப் பிரசங்கங்கள் நடைபெறல் வேண்டும். சிறப்பாகக் கிராமப் பிரசா ரத்திலேயே தொண்டர்கள் கண்ணுங் கருத்துமா யிருத்தல் வேண்டும். நாட்டின் பொதுஜனங்கள் கிரா மங்களிலேயே வசிக்கின்றார்க ளாதலால், கிராமப் பிரசாரந்தான் பெரும்பயனை யளிப்பதாகும். கிறித் தவப் பாதிரிமார்கள் கிராமப் பிரசாரத்தினாலேயே, திரளான மக்களைக் கொள்ளைகொண்டு வருகின்றார் கள்; எனவே, நமது திருத்தொண்டர் குழாங்களும் கிராமங்களுட் புகுந்து, சிவமணத்தைப் பரப்பி, நம் மக்கள் புறமதம் புகாதவண்ணம் தடுத்தல் வேண்டும். அன்றோர்க்கு நமது சமய மாண்பினை நன்கு அறி வுறுத்துதல் வேண்டும். நல்ல தாளில் பெரிய எழுத் துக்களில் எளிய நடையில் அழகிய சித்திரப்படங்க

ளோடு விளக்கப்பட்டுள்ள துண்டுப் பிரசுரங்களை யாண்டும் பரப்புதல் வேண்டும். சமயாசாரியார், சந்தானாசாரியார் முதலியவர்களுடைய படங்களையெல்லாம் ஐந்து ஆறு நிறங்களோடு கூடிய அழகிய சித்திரப்படங்களாக அச்சிட்டுச் சிறியதோர் விலைக்கு விற்றல் வேண்டும். அடியவர்களனைவரும், போற்றித்திருவகவல், திருத்தொண்டத் தொகை, திருவங்கமாலை முதலிய திருப்பாசுரங்களைப் பாராயணஞ்செய்துகொண்டு பஜனைக்கோஷ்டிகளாகச் செல்லலாம். ஒவ்வொரு திருக்கூட்டத்திற்கும் ஒரு ரிஷபக்கொடியும், ஒரு சுதிப்பெட்டியும், சில தாளங்களும், பெரிய படிக்கு இரண்டு மூன்று படி கொள்ளக்கூடிய நறுமணங்கமழுந் திருநீற்றுப்பை யொன்றும் அவசியம் இருத்தல் வேண்டும். கையெழுத்துப் பிரதிகளெடுக்கும் பெட்டி (Cyclo-style) ஒன்று இருந்தால் சிற்றறிக்கைகள் வெளியிடுதற்குச் சுலபமாக விருக்கும். சில தொண்டர்கள் சிறப்பாக விளக்குப் படங்களோடு சொற்பொழிவு நிகழ்த்துவோர் (Magic-lantern lectures) ஆக விருக்கலாம். இனி, இத்திருத்தொண்டர்கள் முக்கியமாகப் பரப்பவேண்டிய கொள்கைகளைப்பற்றிச் சில உரைகள் கூறுகின்றேன். முதலாவது எல்லா அறங்களுக்கும் அடிப்படையாகவுள்ள ஜீவகாருண்ய நலத்தையே நன்கு வலியுறுத்தல் வேண்டும். மக்களாவா ரனைவரும் மாமிச உணவை நீக்கிவிட்டு, மரக்கறி உணவுகளையே மாந்தும்படி செய்தல் வேண்டும். ஒவ்வொரு திருக்

தொண்டரும், "நான் இந்த ஆண்டில் நூறு பெயர்களைச் சைவம்பிடிக்கும்படி செய்திருக்கின்றேன்" என எண்ணி எண்ணி இன்புறுமாறு தாம் தாம் இவ்வேலையினைப் பெருவேட்கையோடு செய்தல் வேண்டும். கட்குடியையும் அறவே யொழித்து விடுதற்குப் பெரும்பாடு படுதல் வேண்டும். எக் காரணத்தை முன்னிட்டும் எவரும் சிறு தெய்வங்களுக்கு உயிர்ப்பலி யிடாது, சுத்த ஆராதனையே செய்து சுகமாக வாழும்படி செய்தல் வேண்டும். வைதிகரென் போர் செய்யும் உயிர்க்கொலை யாகத்தை எவ்வகை யானும் எவரும் ஆதரிக்காத வண்ணம் செய்தல் வேண்டும். பத்தி மார்க்கத்தையே மக்களுக்குப் பெரிதும் வற்புறுத்துதல் வேண்டும். இந்நெறியை வளர்த்தற்குத் துணையாக, ஆறுமுக நாவலரவர்கள் வரைந்துள்ள திருவிளையாடற் புராண வசனம், பெரிய புராண வசனம், கந்தபுராணவசனம் முதலிய புத்தகங்களை நூற்றுக்கணக்காக வாங்கி வைத்துக்கொண்டு அசல் விலைக்கு விற்றல் வேண்டும். சில திருத்தொண்டர்கள் சிறப்பாக விபூதி உருத்திராக்கப் பிரசாரஞ் செய்யலாம். இவர்கள் ஆயிரக்கணக்கான விபூதிப் பைகளைத் தைத்து வைத்துக்கொள்ளுதல் வேண்டும். ஏராளமாக ஐந்து ஆறுமுக உருத்திராக்கங்களைக் கயிற்றில் கோத்து வைத்துக்கொள்ளுதல் வேண்டும். மாமிச உணவினை விலக்கிய மக்க ளனைவருக்கும் சிவநாமத்தினைச்சொல்லி இவ்வுருத்திராக்க மங்கல நாணைப் பூட்டி விடுதல்வேண்டும். உருத்திராக்க தாரணஞ்

செய்து கொள்ளுவோர் அனைவருக்கும் ஒவ்வொரு விபூதிப் பையும் கொடுத்தல் வேண்டும். கிராமங்களி லுள்ள சிறு பள்ளிக்கூடங்களுக் கெல்லாம் சென்று மாணவர்களுக்கு மிட்டாய், வாழைப்பழம், ஸ்லேட் பென்சில், சிறுகதைப் புத்தகங்கள் முதலியவற்றைக் கொடுத்து, அவர்க ளனைவரையும் மாமிச உணவை விலக்கும்படி செய்து, அன்னோர்க்கு உருத்திராக்க தாரணஞ் செய்தல் வேண்டும். சிறுபிள்ளைகளே இனி வருங்காலத்து மக்களாதலால் சிறு பள்ளிக் கூடங்கள் முதல் பெரிய பள்ளிக்கூடங்கள் வரையில் நமது தொண்டர்கள் புகுந்து மாணவர்களைச் சிவ நெறியிற் பழக்குதல் வேண்டும். பெரிய ஆங்கிலக் கல்லூரிகளிலும், உயர்தரக் கலாசாலைகளிலும் மற்ற நடுத்தரப் பாடசாலைகளிலும், நமது அன்பர்களிற் சிலர் வாரம் ஒருமுறை ஒவ்வொரு வகுப்பிற்கும் சன் மார்க்கத்தைப் போதிக்கும் சமய போதகராகச் சென்று பணி செய்தல் வேண்டும். இஃது ஒரு முக்கியமான வேலையாகும். இவ் வேலையினைச் செய் தற்குத் துறவிகளும், உத்தியோக ஓய்வுபெற்றுள்ள அன்பர்களும் (Pensioners) அவசியம் முன்வருதல் வேண்டும். இந்நாளில் நமது சைவப் பெருமக்களிற் பலர் ஐந்தெழுத் தருளுபதேசம் பெற்றுக்கொள்ளு கின்றார்களில்லை! சுமார்த்தர்களால் உபநயனச் சடங்கு எவ்வாறு சமயப்பிரவேசக் கிரியையாகக் கட்டாய மாக அநுட்டிக்கப் படுகின்றதோ, அவ்வாறே இவ் வைந்தெழுத்தருளுபதேசம் நமது சமயப்பிரவேசக்

கிரியையாதலால், கட்டாயமாக எல்லோராலும் அவசியம் அநுட்டிக்கப்படல் வேண்டும். இந் நெறியினை வளர்த்தற்கு ஒவ்வொரு திருக்கூட்டத்தாரும், "நாங்கள் இந்த ஆண்டில் நூறு பெயர்களைச் சமய தீக்கை பெற்றுக்கொள்ளுமாறு செய்துள்ளோம்" என எண்ணி இன்புறுமாறு வேலை செய்தல் வேண்டும். ஆலய வழிபாடு இந்நாளில் பெரிதும் மறக்கப்பட்டு வருதலால் பொது ஜனங்களுக்கு ஆலயவழிபாட்டின் அவசியத்தை நன்கு வற்புறுத்துதல் வேண்டும். அன்பர்களனைவரும் நாடோறும் அருட்பாக்களைந்தினையும் அவசியம் பாராயணஞ் செய்யுமாறு செய்தல்வேண்டும். இவ்வாறு பாராயணஞ் செய்வதற்கு, ஆறுமுகநாவலரவர்களால் வெளியிடப்பட்டுள்ள அகத்தியர் தேவாரத்திரட்டுடன் கூடிய அருட்பாப் புத்தகம் சாலச் சிறந்ததாகும். இவ் வருட்பாப் புத்தகத்தை நூற்றுக்கணக்காக வாங்கிவைத்துக்கொண்டு, பாராயணஞ் செய்ய விரும்புவார்க்கு அசல்விலைக்கு விற்கலாம். அருச்சித்தற்கு, "வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி" முதலிய அருச்சனைப் பதிகங்களைப் பாடி மகிழச் செய்யலாம். பலர்க்கு நமது சமயாசிரியர் யாவர் என்பது நன்கு விளங்கவில்லை. அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய அருட்குரவர் நால்வருமே நமது சமயாசாரியர்கள் என்பதை நன்கு வலியுறுத்தி அன்னோர் திருவடிகளை அனைவரும் முடிகளிற் புனைந்து போற்றுமாறு செய்தல்வேண்டும். இனிச்

சைவப் பெருமக்களாகிய நமக்குச் சிவபெருமானே முழுமுதற் கடவுளாவா ரென்பதையும், மூவரில் ஒரு வராகிய உருத்திரரல்லர் என்பதனையும் எல்லோரும் இனிது உணருமாறு செய்தல் வேண்டும். மற்றும் நமது சைவ நன்மக்க ளனைவரும், "நாங்கள் செய்த தவத்தால் சைவ சமயத்திற் பிறந்து பேரின்பப் பெரு வாழ்வு பெறும் பேறு பெற்றுள்ளோம்" என இறு மாப்பெய்தி இன்புறுமாறும், எவரும் எக்காரணங் கொண்டும் புறச்சமயங்களைக் கனவிலும் கருதா திருக்குமாறும் செய்தல் வேண்டும். இதற்கு முன்னர் நமது சமயமாட்சியினை யறியாது புறச்சமயம் புகுந் துள்ளோரில், இது காலை நமது சமய மாண்பினை யுணர்ந்து திரும்பி வர விரும்புவோரைத் தாராள மாகச் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு புறச்சமயம் புகுந்து திரும்பி வருவோரை மீட்டும் அழைத்துக் கொள்வதை நாம் ஒருகாலும் மறுத்த லாகாது. நமது சமயாசாரியர் நால்வரில் இருவர் இதற்குப் பெரும் வழிகாட்டிகளாக விருக்கின்றார்கள். அப்பரெம்பெருமானார் தாமே சமண் சமயம் புக்கு அதிற் சின்னா ளிருந்து, மீட்டும் சைவ சமயத்திற் பிரவேசஞ் செய்தருளினார்கள். திருஞான சம்பந் தப் பெருமானார் மதுரைமா நகரத்தில் சமணர்களை வாதில் வென்ற காலத்தில் பசுவின் சாணத்தைப் பச்சையாகப் பூசிக்கொண்ட பத்தர்க ளனைவரையும், பசுவின் கன்றுக்குட்டிகளைத் தம் தோள்களிலே தூக்கிக்கொண்டு நின்ற அன்பர்க ளனைவரையும் சம

ணர்களென ஒறுக்காது சைவரெனக் காத்தருளி னார்கள். இனிப் புறச்சமயம் புகுந்தவர்கள் சைவ சமயப் பிரவேசஞ் செய்கின்றகாலத்து, அன்னார் பிராயச்சித்தம் முதலியவற்றிற்காக அதிகச் செலவு செய்து வருந்தும்படி செய்தலாகாது. திலகவதியார் திருவாளன் திருநீற்றினை அள்ளித் திருவைந்தெழுத்தை யோதித் திருநாவுக்கரசடிகளின் நெற்றியில் சாத்தி அன்னாரைச் சைவ சமயப் பிரவேசஞ் செய்வித்ததுபோல், பெரியோரைக்கொண்டு அன்னோர் திருக்கரங்களால் தெய்வ நீற்றினை அள்ளித் திருவைந்தெழுத்தை யோதி நிறையப் பூசுவித்து வருவோரனை வரையும் எளிதிற் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். சேர்த்துக் கொள்ளாவிட்டால், நமது சமயத்திற் குரிய ஜனப்பெருக்கும் வரவரக் குன்றுவதோடு, நமது சமய தர்மமும் பிறழ்ந்து போவதாகும். இனித் தாழ்ந்த வகுப்பாரை உயர்த்துதற்கு நம்மால் எவ்வளவு தூரம் பாடுபட முடியுமோ, அவ்வளவு தூரம் அவசியம் பாடுபடல் வேண்டும். புறமதம் புகுவோரிற் பெரும் பாலோர் தாழ்ந்த வகுப்பாரே யாவர். காரணம் நாம் அவர்களுக்குச் சமயஞான போதனையும் செய்யாது, நம்மை நண்ணவும் விடாது அடித்துத் துரத்துதலே யாம். அன்னோரும் மக்களே யென நினையாது, இவ்வாறு நாம் அவர்களை அடித்துத் துரத்தும் வரையில் நமது சமயம் வளருதற்கு இடமே யில்லை! ஒரு சமயம் என்பது, பலரும் வந்து சேர்ந்து பயன்பெற் றுய்யு மாறு தனது வாயில்களைத் திறந்து வைத்திருந்தா

லொழிய, அது சமயம் எனப்படமாட்டாது. விரிந்த நோக்கத்தோடு ஒரு சமயத்தை உலகம் முழுவதும் பரப்ப வெண்ணுது, இலை மறை காய்போல், ஒரு சிலர்க்குமட்டும் பயன்படுமாறு மறைத்து வைத்துக் கொள்ளுதல் தகாது! தகாது!! தாராளமாக மக்களாவா ரனைவரும் தன்னை யடைந்து ஆனந்த வெள்ளத்தில் திளைக்கும் வண்ணம் எல்லோரையும் அறை கூவி யழைத்து ஆட்கொள்ளுவதே ஒரு சமயத்திற்குச் சிறந்த அடையாளமாகும். எனவே, நமது அருமைச் சகோதரர்களாகிய தாழ்ந்த வகுப்பாரை உயர்த்தி அன்னோர்க்கும் நம்மத உரிமைகளை நல்கி நல்வழிக் குய்த்தற்குரிய நெறிகளை வகுத்துக் காட்டுதலில் நாம் ஒருநாளும் பின்வாங்குத லாகாது. சில தொண்டர்கள் தம் வாழ்நாளை அவர்களுக்கெனச் சிறப்பாகப் பாடுபடுவதில் ஈடுபடுத்துதல் வேண்டும். சுகாதார நெறிகளை அவர்களுக்கு நன்கு போதித்தல் வேண்டும். அன்னோரிற் சிலர் நாம் உண்டு எறியும் எச்சிலை உண்டலையும், மாடுகளை வெட்டித் தின்றலையும், கட்குடித்தலையும் அறவே யொழித்து விடுமாறு செய்தல் வேண்டும். அவர்களுடைய பிள்ளைகளுக்கெனச் சிறப்பான கலாசாலைகளைத் தாபித்து, நல்ல ஆசிரியர்களைக் கொண்டு அப்பிள்ளைகளை நன்னெறியிற் பழக்குதல் வேண்டும். அவர்கள் குடிசைகளுக்குச் சமீபத்தில், அவர்களுக்கெனச் சிறப்பாகப் பிள்ளையார் கோவில்களை யேற்படுத்தி, அவைகளில் அவர்கள் தினந்தோறும் வந்து வழிபாடு செய்யும்படி

செய்தல்வேண்டும். இதற்கு ஒரு திருத்தொண்டர் நூறு இருநூறு பிள்ளையார்களைச் செய்து அவர்களிருக்கு மிடங்களி லெல்லாம் சென்று சமீபத்திலுள்ள அரசமரத் தடியில் பிரணவப்பொருளாம் பெருந்தகையைப் பிரதிஷ்டை செய்தல் வேண்டும். இனிப் பெண்மக்களுக்குச் சமயஞானத்தை ஊட்டுதலிலும் நாம் நமது கவனத்தை நன்கு செலுத்துதல் வேண்டும். நமது பெண்மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பெயர் நமது சமயக் கொள்கைகளை நன்கு உணராதவர்களாகவே யிருக்கிறார்கள். சமய ஞானம் பெண்மக்கள்பால் வளர்ந்தாற்றான், வருங்காலத்துப் பிள்ளைகள் எல்லோரும் சமயஞான வடிவமாகத் தோன்றுவார்கள். எனவே, இந் நெறியினைத் திருத்தொண்டர்கள் சிறிது வளர்ப்பதோடு, கல்வியறிவுள்ள தாய்மார்களும் பலர் முன்வந்து இதற்காகப் பெரிதும் பாடுபடல் வேண்டும். குருடர், செவிடர், ஊமையர் முதலியவர்களுக்கும் நமது சமயச்சார்பில் ஒரு சில இடங்களில் பாடசாலைகள் தாபிக்கப்படல் வேண்டும். திக்கற்ற குழந்தைகளை வைத்து வளர்த்தற்குரிய அநாதரக்ஷகாலயங்களும் நமது சமயச் சார்பில் ஆங்காங்கு அரும்புதல் வேண்டும். இது சிறந்த பெரிய வேலையாகும். இதற்குப் பெரும்பொருள் வேண்டும். இப் பெரும்பொருளைப் பெறுதற்கு இலேசான வழி யொன்று உண்டு. ஒரு பெரிய நீர் நிலை வீண் கமர்நிலத்தில் பாய்ந்துகொண்டிருக்கின்றது. அதனை இவ்வழியில் திருப்பிவிட்டாற்

போதும். அநேகமாவது வீண் சோம்பேறிகள் வயிறார வுண்டு ஏப்பமிட்டுக்கொண்டு திரிதற்குக் காரணமாக வுள்ள அன்ன சத்திரங்களை, "ஆதுலர்க் கன்னசாலை ஓதுவார்க்கு உண்டி" எனும் ஆன்றோர் வாக்கிற் கிலக்காக இவ் வழியில் பயன்படுத்துதல் வேண்டும். அன்னசத்திரங்கள் வைத்திருப்போர் இதனை நன்கு கவனித்து அவசியம் சீர்திருத்துதல் வேண்டும். இனி, நமது சைவப் பெருமக்கள் வைத்திருக்கின்ற தரும வைத்தியசாலைகளில், காலையும் மாலையும் கடவுள் வணக்கம் செய்வதோடு, சமய சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களினையும் வழங்கி, நோயாளி களுக்கும் அவர்களோடு கூட வருவோர்க்கும் சமய போதனை செய்தல் வேண்டும். நமது அருந்தமிழ்ப் பாடசாலைகளில் சமய போதனையும் ஓர் முக்கியமான பாடமாகக் கருதப்படல் வேண்டும். இந்நாளில் இது நன்கு கவனிக்கப்படாதது பெரிதும் வருந்தத் தக்கதே யாம். சமய ஞானங் கலவாத கல்வியறிவு ஏட்டு ணையும் பயன்படாது. எனவே, அருந்தமிழ்க் கலா சாலைகளின் அதிகாரிகள் சமயக் கல்வியினையும் முக்கி யமானதாகக் கருதுதல் வேண்டும். இவ்வாறு பாட சாலைகளில் சமயக் கல்வியினைப் போதிப்பதற்குப் போறிஞர்கள் சிலர் உதவிகள் மிக இன்றியமையாதன வாம். முதற்கண், செய்யுள் வடிவமாகவுள்ள சமய நூல்களனைத்தினையும் இனிய எளிய வசன வடிவ மாகவும் ஆக்கித் தரல் வேண்டும். மெய்கண்ட சாத் திரம் பதினான்கினையும் பன்னிரு திருமுறைகளினை

யும் வடித்துத் திரட்டி ஒன்றுக் கூட்டி, ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ச தேவர் உபதேச மொழியைப் போல், சிறு சிறு உவமானங்களாலும் கதைகளா லும் சரித்திரங்களாலும் பெரிய தத்துவங்களை விளக்கிக் காட்டும் வண்ணம், சைவ சித்தாந்த அமுத மொழிகள் எனும் பெயரோடு ஓர் இனிய நூல் எழுதித் தரல் வேண்டும். "சைவ சமயம் என்பது என்ன?" எனும் பெயரோடு சைவ சமயக் கொள்கைகளனைத்தினையும் வெள்ளிடை மலைபோல் விளக்கிக் காட்டும் இனிய வசன நூல் ஒன்றும் அவசி யம் எழுதப்படல் வேண்டும். இவ்விரு நூல்களும் ஆங்கிலத்திலும் யாக்கப் பெறல் வேண்டும். ஆண்டு தொறும் தலபுராணங்களையே எழுதி எழுதிக் குவிக் கும் புலவர் பெருமக்களும் வீண் விவாதங்களையே எழுதி வெளியிடும் அன்பர்களும், இவ்வழியில் இறங்கி வேலை செய்தல் பயனுடையதாகும். பொது வாக மாணவர்களுக்குச் சிறந்த நூல்களைக் குறிப் பிட்டு ஆண்டிற் கொருமுறை சமயப் பரீக்ஷைவைத்து அதிற் றேறுபவர்களுக்குப் பரிசுகளும் யோக்யதா பத்திரங்களும் வழங்குதல் வேண்டும். பொதுவாகவும், சாத்திரங்களிலும், தோத்திரங்களிலும் ஆக மூன்று திறமாகப் பரீக்ஷைகள் வைத்து நடத்தலாம். தோத் திரப் பரீக்ஷையினைக் குறிப்பிட்ட எண்ணுள்ள பாடல்களைப் பிழையற ஓதுவார்க்கு நடத்தலாம். இனி, வேத-ஆகம-தேவார பாடசாலைகளை யெல்லாம் சோற்றுச் சாலைகளாக நடாத்தாது கலாசாலைகளாக

நல்ல முறையில் நடாத்தி, அவைகளிற் பயிலும் மாணவர்களுக்கும் பரீக்ஷைகள் வைத்துப் பரிசுகள் வழங்குதல் வேண்டும். மறந்தும் நம்மக்களைக் கிறித்தவப் பாதிரியார் பாடசாலைகளுக்கு அனுப்புதலாகாது. பெண் மக்களுக்கு அவரவர் வீட்டுக்கு வந்து கல்வி கற்பிக்கும் ஜனனமிஷனைச் சேர்ந்த கிறித்தவ உபாத்திமைப் பெண்மணிகளை நம்முடைய தூய இல்லங்களிலே அடியெடுத்து வைக்க விடலாகாது. மேற்கூறிப் போந்த இரண்டனுக்கும் இடங் கொடுப்பதால் வருங் கேடுகள் பல. அவை யாவும் அன்பர்கள் நேரிலே அறிந்தனவே யாம். ஆகவே, நம்முடைய மக்களுக்கு நம்முடைய உபாத்தியாயர்களைக் கொண்டே கல்வி கற்பித்தல் வேண்டும். பெற்றோர்கள் இதிற் பெருஞ் சிரத்தை செலுத்துதல் வேண்டும். இனித் திருக்கோயில்களிலுள்ள திருவோலக்க மண்டபங்களில் அவசியம் தினந்தோறும் புராணபடனம் நடைபெறல் வேண்டும். ஆங்கு வடமொழிச் சுலோகங்களைச் சொல்லி அர்த்தஞ் செய்வதால் எள்ளளவும் பயனில்லை. நமது இன்றமிழ் மொழியில் பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப்பட்டுள்ள திருவிளையாடற்புராணம் பெரியபுராணம் கந்தபுராணம் முதலியவைகளையே வாசித்தல் வேண்டும். திருக்கோயில்களிலே திருவிழாக் காலங்களில் வீண் செலவு செய்து நடாத்தும் வேசையர் நடனத்தை யறவே ஒழித்துவிடுதல் வேண்டும். அதற்குப் பதிலாகச் சைவப் பெருஞ் சொற்பொழிவுகளை

நடாத்துவித்தல் வேண்டும். இனி, நமது சிவாகமங்களை யெல்லாம் திரட்டி அச்சிடுவதோடு, அருந்தமிழ் மொழியினும் அவசியம் அவை யனைத்தையும் மொழி பெயர்த்திடுதல் வேண்டும். நமது சைவ நூல்களை யெல்லாம் நல்ல தாளில் அழகிய காலிகோ கட்டிடத்தில் அச்சிட முயலல் வேண்டும். இவ் வேலையினைத் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் செய்யத் தொடங்கியிருப்பது பெரிதும் பாராட்டற் பாலதாகும். உண்மைச் சைவ சமய வளர்ச்சி கருதி உழைக்கும் மாதப் பத்திரிகைகளைச் சிவநேசச் செல்வ ரனைவரும் அவசியம் ஆதரித்தல் வேண்டும். சைவ சமயிகளாவா ரனைவ ரில்லங்களினும், சிவாலயங்க ளனைத்தினும் நடைபெறும் கிரியைகளெல்லாம் சைவக் கிரியைகளாகவே யிருத்தல் வேண்டும். இந்நாளில் நடை பெறுவதைப்போல் ஸ்மார்த்தக் குழப்பம் தலை காட்டுதலாகாது. சைவக் கிரியாபத்ததிக ளெல்லாம் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டு வழக்கத்திற்கு வந்தால், சொல்லுவோர்க்கும் கேட்போர்க்கும் இனிமையாக விருக்கும். இதுகாறும் எளியேன் சைவ சமய வளர்ச்சிக்குரிய பல் வேறு வகைப்பட்டுள்ள பொருள்களைப் பற்றி பல உரைகள் வழங்கியுள்ளேன். இவைக ளனைத்தினையும் கேட்கும்பொழுது ஒரு சிலர்க்குக் கனவுகாண்பதுபோ லிருக்கலாம். ஆனால் உண்மையில் கனவு காண்பதல்ல. எல்லா உரைகளும் சில ஆண்டுகளாகச் சிறியேன் சிந்தனை செய்ததின் பயனே யாகும்.

மேலும் செய்கையிலும் சிலவற்றை எளியோங்கள் காரைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் செய்து வருதலும் அன்பர்க ளறிந்த தொன்றேயாம். ஈண்டு இவைகளை யெல்லாம் எடுத்து விரித்துரைப் பதன் காரணம், நமது சைவப் பெருமக்க ளனைவரும் முதற்கண் இதனைச் சிந்தனையிலாவது வைத்துச் சிறிது சிறிதாகவாவது செய்கையிற் காட்ட முன் வரல் வேண்டும் என்பதே யாகும். மேலும் பல நோய்களால் வருந்தும் ஒருயிர்க்கு எல்லா நோய் களுந் தீருமாறு மருந்து கொடுத்தாலொழிய, ஒன் றினைமட்டுந் தீர்க்கத்தக்க மருந்தைக் கொடுப்பதிற் பயனில்லை. ஒன்று தீர்ந்தாலும் மற்றொன்று துன் புறுத்தும். எனவே, நமது சமய வளர்ச்சிக்குரிய எல்லாச் சீர்திருத்தங்களையும் நாம் செய்தே தீருதல் வேண்டும். நமது சைவப்பயிர் பரிபாலிப்பாரின்றி இதுபோழ்து பல்வகையானும் தளர்வுற்று வாடி நிற்கின்றது. மேலும் பல்வகைக் களைகள் அதனைப் பெரிதும் துன்புறுத்துகின்றன. ஒருபக்கம் சுமார்த் தக் குழப்பம் அதனை விழுங்கிக்கொண் டிருக்கின்றது. ஒரு பக்கம் கிறித்தவமதம் அதனைச் சூழ்ந்து கொண்டு காடாக வளர்ந்து வருகின்றது. ஒருபுறம் "எம்மத மும் சம்மதம்" எனும் புதுக்கொள்கைகள் அதனைப் பறக்கச் செய்கின்றன. நமது மக்களிற் பலர் சமய ஞான மின்மையால், தம துரிமைப் பொரு ளியா தென்பதை உணராது வீண்பொழுது போக்குகின் றார்கள். படித்தவர்களிலும் பிரபுக்களிலும் பெரும்

பாலோர் அயர்ந்து உறங்குகின்றார்கள். திருமடங்களெல்லாம் வெறும் மடங்களாகி வருகின்றன. சைவநூற் பயிற்சியும் சைவக் கொள்கைகளும் பெரிதும் அருகிவருகின்றன. அன்பர்களே! இதுவோ நாம் அயர்ந்து உறங்குதற்குரிய காலம்? எழுமின்! எழுமின்! விழிமின்! அறிமின்! சைவப் பயிரைப் பரிபாலியுங்கள்! பரிபாலியுங்கள்!! நாடெங்கணும் சிவமுழக்கஞ் செய்யுங்கள்! பரந்த நோக்கத்தோடு சண்டை சச்சரவின்றி, விரிந்த நமது சமயக் கொள்கைகளை யாண்டும் செய்கையிற் பரப்புங்கள். வீண் பெருமை பேசுவதிற் பயனில்லை! பேச்சுக்காலம் பறந்துவிட்டது. செய்கைக் காலம் பிறந்திருக்கின்றது. எனவே, எல்லோரும், "செய்கை செய்கை" யென்று சிந்தனை செய்துகொண்டு சிவநெறியை வளருங்கள்! வளருங்கள்.

"வையம் நீடுக! மாமழை மன்னுக!
மெய் விரும்பிய அன்பர் விளங்குக!
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக!
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே."

திருச்சிற்றம்பலம்